## திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

## அசல் வழக்கு எண்:176/2015

## வா.சா.2

நாள்:04.10.2021

பிரதிவாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44 ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | R.பழனி | | |
| தந்தை பெயர் | ராமையா | சாதி | |
| கிராமம் | உதாரமங்கலம் | தொழில் | வழக்கறிஞர் |
| தாலுக்கா | பாபநாசம் | வயது | 48 ஆண்டுகள் |

**வா.சா.2: முதல் விசாரணை:**

நான் இந்நீதிமன்றத்தில் இ.ம.எண். 622/2015ல் 15.12.2015 ஆம் தேதி வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டேன். நான் தாவா சொத்தை 01.08.2017 ஆம் தேதி மதியம் 3 மணியளவில் இருதரப்பினரும் மற்றும் அவர்களுடைய வழக்கறிஞர் முன்னிலையில் தாவா சொத்தை பார்வையிட்டேன். தாவா A அட்டவணை சொத்து பூதலூர் வட்டம் ஒன்பத்துவேலி கிராம புலஎண்கள். 96/5C 4 செண்ட், 96/7G 1 1/3 செண்ட், 96/6J 14 2/3 செண்ட் மொத்தம் 20 செண்ட் அது வாதிக்கு சொந்தமானது. வாதி தாவா B செட்டியூல் சொத்தை பிரதிவாதிக்கு விற்றுள்ளார். தாவா B செட்டியூல் சொத்து புல எண்கள் 96/5Cல் 4 செண்ட், 96/6J ல் 5 செண்ட் உள்ளது அதன் கூடுதல் 9 செண்ட். பிரதிவாதி வாங்கிய புல எண் 96/6Jல் மொத்தம் எத்தனை செண்ட் இருந்தது என்றால் 7 செண்ட் இருந்தது. பிரதிவாதி அவர் புல எண் 96/6Jல் கிரையம் வாங்கிய 5 செண்ட்க்கு கூடுதலான 2 செண்டை அனுபவித்து வருகிறார். அந்த 2 செண்டை நான் எனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் EFGH என்று குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதிகள் கிரையம் வாங்கியது 9 செண்ட் அவர்களுடைய

அனுபவத்தில் உள்ளது 11 செண்ட். அந்த 11 செண்ட் போக வாதியிடம் 9 செண்ட் நிலம் உள்ளது. புல எண் 96/6Jல் உள்ள 14 2/3 ல் வாதி பிரதிவாதிக்கு விற்ற 5 செண்ட்ம் பிரதிவாதியின் அனுபவத்தில் கூடுதலாக உள்ள 2 செண்ட்ம் போக மீதி 7 2/3. நான் எனது அறிக்கையில் புல எண் 96/6 Jல் 20 செண்ட் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ 1 மற்றும் 2 .

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ .ம்/

திரு. A. தனசேகரன், BSc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.